பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## 30ஆண்டுகளில் உணவுப் பஞ்சம் உலகில் உச்சக்கட்டம் அடையும்

முப்பது ஆண்டுகளில் உலகில் உணவுப்பஞ்சம் உச்சக்கட்டத்தை அடையும் என ஐக்கிய நாடுகளின் உணவு, பொருளாதார ஒருங்கமைப்பின் நிர்வாக இயக்குனர் ஐ. க தவுஸ் டிரோன் அறிவித்துள்ளார். வேகமாகப் பெருகிவரும் சனத்தொகையினால் இவ் உணவுப்பஞ்சம் ஏற்பட இருப்பதாகவும் 2000ஆம் ஆண்டுகளில் உலக சனத்தொகை 550 கோடியாக இருக்கும் என்றும் அது 2030ஆம் ஆண்டுகளில் 900 கோடியாக இருக்கும் என்றும் இது எதிர்கால உணவுப்பஞ்சத்திற்கு காரணமாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். சனத்தொகை பெருக்கத்திற்கு இணையான உணவு (6ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 12 | 26-06-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 128

## 1993 தேர்தல் இடாப்பின் அடிப்படையில் வாக்களிப்பு

(கொழும்பு)

1993 ஆம் வருட தேர்தல் இடாப்பின் அடிப்படையிலேயே இம்முறை தேர்தல்கள் நடைபெறும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 1993 ஆம் வருடப் பதிவின் படி 5 லட்சத்து 11ஆயிரத்து 366 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தேர்தலில்வாக்களிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவது அரசைப் பொறுத்தது. அது எங்களின் வேலையல்ல எனத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

## நாட்டின் நிலையை ஆராய்ந்தே பாராளுமன்றத்தைக் கலைத்தேன்

**-டி. பி. விஜேதுங்கா**

(கொழும்பு)

''நாட்டின்நிலைமையைகவனமாக ஆராய்ந்த பின்பே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் நடத்த நான் தீர்மானித்தேன்'' என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

பாராளுமன்ற கலைப்பு தொடர்பான அறிவித்தல் வெளியானதையடுத்து அவர் நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஆட்சியை கைப்பற்றவும் அதிகாரத்தில் தொடர்ந்திருக்கவும் வன்செயல்கள் வெளிப்படையாகவும் மறை (6ஆம் பக்கம் பார்க்க)

## கம்பஹா மாவட்டத்தில் சந்திரிகா போட்டி

(கொழும்பு)

மேல்மாகாண முதல் அமைச்சரும், சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவருமான சந்திரிகா குமாரணதுங்கா எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளராக போட்டியிடுகின்றார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேல் மாகாணசபை தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட இவர் ஆகக்கூடிய விருப்புத் தெரிவு வாக்குகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கட்சியின் சார்பில் (6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் தேர்தல் நடத்த அரசாங்கம் குறுக்கு வழிகளைக் கையாள திட்டம்

## ஷெல் தாக்குதல் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலுக்கு சுன்னாகம் கிழக்கை சேர்ந்த கே. குமாரச்சந்திரன்(வயது 47) என்பவர் காயமடைந்துள்ளார்.

மேற்படி காயத்திற்கு இலக்கானவர் யாழ் போதனா மருத்துவமனையில் நேற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## எதிரணி அதிருப்தியாளர் எம்முடன் இணைகின்றனர்

### ஐ. தே. க. முக்கியஸ்தர் பெருமிதம்

(கொழும்பு)

ஆகஸ்டில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியே வெற்றியீட்டும் என்றும் இதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியில் தற்போது பல கட்சிகளின் அதிருப்தியாளர்கள் உண்மையை உணர்ந்து இணைந்து கொண்டு இருப்பதாகவும் இதன் மூலம் ஏனைய கட்சிகளின் உண்மையான சொரூபத்தை மக்கள் உணரக் கூடியதாக இருப்பதாகவும், எனவே மக்கள் கூடிய நம்பிக்கை தமது கட்சியின்மீது வைக்க கூடியதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோழும்பிற்கு யாழ். அரச அதிபரை உடன் புறப்பட்டு வருமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சில வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களோ அன்றி சுயேட்சைக் குழுக்களோ வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் பாராளுமன்றத் தேர்தல் வடக்கில் நடந்ததாகக் காட்டிக் கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டுள்ளது. இதன் ஒரு கட்ட

## துன்பத்திலுள்ள மக்களுக்கு புதிய வாழ்வு கிடைக்கும்

### சந்திரிகா குமாரணதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

பதினேழு வருடகால ஆட்சியில் துன்பத்தில் வாடிய மக்களுக்கு ஒரு புது வாழ்வு கிடைக்கும் என்றும் இதன் மூலம் மக்கள் ஒரு முழுமையான அரசியல் விடுதலையை அடைவர் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும்மேல்மாகாணசபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காதெரிவித்தார் இணைந்து அமைத்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியே வெற்றிவாகை சூடும் என்றும், மக்கள் தகுந்த நேரம் வரை காத்திருந்து ஒரு சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மிக விரைவில் தான் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும் இதற்கு ஒரு குழு அமைக்கப்பட்

தமது கட்சியில் தற்போது பல கட்சிகளின் அதிருப்தியா ... உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரதராஜப்பெருமாள் விரைவில் திருப்புவார்

(கொழும்பு)

முன்னாள் வட-கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் விரைவில் இந்தியாவிலிருந்து திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது பாராளுமன்றத் தேர்தலில் ஈ பி. ஆர். எல். எப் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் இவர் போட்டியிடலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இக் குழுவின் சார்பில் பிரேமசசந்திரனும் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் மாவை சேனாதிராசா அம்பாறையிலும் போட்டியிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடா சென்ற ரெலோ எம். பி கருணாகரன் தேர்தல் செய்தி கிட்டியதும்அவசர அவசரமாக நாடுதிரும்புகிறார்.

## தவறான சிகிச்சையால் குழந்தை மரணம்

### காவல்துறையிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் குழந்தையொன்று தவறான சிகிச்சையினால் மரணமடைந்துள்ளதாக குழந்தையின் தாயார் தமிழீழ காவல்துறையின் யாழ். பணிமனையில் புகார் செய்துள்ளார்.

சொலமன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் சிந்துஜா என்னும் ஒன்றரை வயதுப் பெண் குழந்தையே இவ்வாறு மரணமடைந்ததாக புகாரிடப்பட்டுள்ளது.

றத் தேர்தல் வடக்கில் நடந்ததாகக் காட்டிக் கொள்ள சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக யாழ். மாவட்ட, சில தேர்தல் தொகுதிகளின் வாக்காளர் பட்டியலுடன் உடன் கொழும்பிற்கு வருமாறு யாழ். அரசாங்க அதிபரை அரசாங்கம் பணித்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சில தொகுதிகளுக்குரிய வாக்காளர் பட்டியலை எடுத்து வருமாறு அரசாங்கம் அவசரச் செய்தி ஒன்றை நேற்று மாலை விடுத்தது. யாழ்ப்பாணம். வட்டுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான பேச்சாளர் சிறிமா, சந்திரிகா ஐ. தே. க. சார்பில் ரணில், காமினி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பேச்சாளர்களாக திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா, திருமதி சந்திரிகா குமாரணதுங்கா ஆகியோர்இடம் பெறஇருப்பதாகவும் ஏனைய கட்சிகளின் தலைவர்களும் இதில் ஈடுபடஉள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா தலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் திடீர் அறிவிப்பு மோசமான விளைவை ஏற்படுத்தும்

### ஐ. தே. க. சிரேஷ்ட உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைத் திடீரென கலைத்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் செய்கை ஒரு அரசியல் விபத்து எனவும் இதன் விளைவுகள் ஜனாதிபதியால் கூட சிந்தித்துப் பார்க்க முடியாத அளவு மோசமானதாக அமையும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்ஒருவர்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இம்முடிவு தனக்கு மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற தேர்தலுக்கு தம்மை எந்த வகையிலும் தயார் செய்யவில்லை எனவும் ஜனாதிபதித் தேர்தலுக்காகவே தம்மைத் தயார் செய்து கொணடு இருந்ததாகவும் இதனால் எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியில் கூட்டுச் சேர்ந்துள்ள ஏனைய கட்சிகளுடன்தேர்தல் உடன்பாடு, உறுப்பினர் ஒதுக்கீடு மற்றும் கொள்கை வகுப்பு போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட குறுகிய காலத்தில் செய்ய வேண்டியிருப்பதாகவும் இது கட்சிகளின் கூட்டைச் சிதைக்க கூடும் எனவும் கூறப்படுகிறது.

மேலும் பொதுஜன ஐக்கிய முன்னணிசில தேர்தல்தொகு

(6ஆம் பக்கம் பார்க்க)

முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காதெரிவித்தார்

தமது கட்சியும் மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளும் ஈடுபடப்போவதாகவும் இதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### எதிர்க்கட்சி வரிசையில் ஆயினும்

# சகாக்களுடன் இருக்கவே டி. பி. விரும்புகிறார்

### ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

தனது தலைமைக்கு தலை வணங்காத தமது கட்சியினரின் ஆட்சியில் பாராளுமன்றம் இருப்பதைவிட தனது தலைமையை ஏற்று நடக்கும் ஓர் எதிர்க் கட்சியாகப் பாராளுமன்றத்தில் இருப்பதையே டி. பி. விஜேதுங்கா விரும்புவதாக 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டன் ஐவன் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது வெற்றிக்கான வாய்ப்பு எதிர்க் கட்சியினருக்கே அதிகமாக இருக்கின்றபோதும், பாராளுமன்றத்தை டி. பி. விஜேதுங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாராளு. கலைப்புக்கு வெடிகொளுத்தி மகிழ்ச்சி

(கொழும்பு)

சிறிலங்காப் பாராளுமன்றம் அதன் ஆயுட் காலத்திற்கு ஆறு மாதங்கள் முன்பாகவே கலைக்கப்பட்டிருப்பதற்கு வரவேற்பு தெரிவிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தொண்டர்கள் கொழும்பிலும் தென்பகுதிகளிலும் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்துள்ளனர் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டி. பி. விஜேதுங்காவினால் சிறிலங்கா பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்ததும் பெருமளவு மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்தனர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது

# தாக்குதலை அடுத்து காரைநகரில் தங்கியிருந்த அனைவரும் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் தீவுப்பகுதியில் இம் மாத முற்பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய இரு தாக்குதல்களைத் தொடர்ந்து காரைநகர் தீவுப்பகுதியில் இராணுவத்திடம் சிக்கியுள்ள அனைவரும் கைது செய்யப்பட்டு நயினாதீவு கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மாதம் ஆறாம் திகதி கடற்படைத்தளத்தில் நடத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலைத் தொடர்ந்து அங்குள்ள அனைவரும் காரைநகர் கடற்படைத்தளத்திற்குஅழைத்துச் செல்லப்பட்டதாகவும் சிலர் மீது தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

இம் மாதம் 12 ஆம் திகதி நடாத்தப்பட்ட மற்றைய கண்ணிவெடித்தாக்குதலின் பின்னரும் இவ்வாறு மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

தற்பொழுது இவ் விசா

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் நீல, சிவப்பு கொடிகளுடன் ஊர்வலம்

### சிற்றுண்டி வழங்கி மக்கள் ஆரவாரம்

(கொழும்பு)

நுகேகொட நகரில் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் ஒன்று திரண்டு வெற்றி கோஷங்களை எழுப்பியதாகவும் இதில் கலந்து கொண்ட மக்கள் நீல, சிவப்பு நிறக் கொடிகளை கையில் ஏந்தியவாறு காணப்பட்டுள்ளனர் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சுதந்திரக் கட்சியை சேர்ந்த முக்கியஸ்தர்களான தர்மசிறி சேனநாயக்கா, மகிந்த ராஜபக்ச, அனுருத்த ரத்வத்தை, டி. மு. ஜயரட்ண, எஸ். பி. திசாநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டதாகவும் இதனால் நகரம் சில மணி நேரம் ஸ்தம்பித நிலை அடைந்ததாகவும் தெரியவருகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாக செய்திகள் வெளிவரத் தொடங்கியதும் மக்கள் வீதிகளில் இறங்கி ஆரவாரம்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி

புறொயிலர், இறைச்சிக் கோழி கிலோ 150/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (வெலிங்டன் சந்தி, அறிவகம் அருகில்) (8644)

### வெள்ளிப் பாதசரம்

இந்த நூற்றாண்டிற்கான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு விற்பனையாகிறது, வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில் (8569)

### பிற்போடப்பட்டுள்ளது

புத்தூர் கருகப்பை ஈஸ்வரன் தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கான அதிர்ஷ்டலாபசீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள் பின்னர் அறிவிக்கப்படும். (8656)

### விற்பனைக்குண்டு

சகல வசதிகளும் கொண்ட காணியும் (2 பரப்பு) வீடும் (திருநெல்வேலி சந்தைச்கருகாமையில் விற்பனைக்குண்டு தொடர்பு:- திருமதி வனிதா தேவி விவேகானந்தம் (c/o. சோமசுந்தரம்) செம்பாட்டு லேன் (வீரவேங்கை ஜெயராஜ் வீதி) பொற்பதி வீதி சொக்குவில் கிழக்கு, மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில் (8655)

# சிங்களவர்க்கு குடியேற்றம் வவுனியாவில் அமையும்

## அமைச்சர் கூரே அறிவிப்பு

(வவுனியா)

வவுனியாவில் வெகு விரைவில் சிங்கள மக்களுக்கென ஒரு வீட்டுத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது- இவ்வாறு வீடமைப்புத் துறை அமைச்சர் சிறீசேன கூரே அண்மையில் வவுனியாவில் வைத்து தெரிவித்தார்.

செட்டிகுளம் பகுதியில் வீரபுர வீட்டுத்திட்டத்தை வைபவ ரீதியகாகத் திறந்து வைத்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறுகையில் எந்த மொழி, சாதி சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி இந்த நாட்டுப் பிரஜைகள் அனைவரும் அடிப்படையான வசதிகள், வாய்ப்புகளைப் பெற்று வாழும் உரிமை சகலருக்கும் உண்டு இதனை அரசாங்கம் நாடு முழுவதும் அமுல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக

# மேசைப் பந்தாட்டம் ஜெயசீலன் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக் கழக விளையாட்டு அவையினரால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் ஆண்தனியாள்ஆட்டத்தில் ''இடதுகை ஆட்டக்காரன்'' இ. ஜெயசீலன்அபாரமாக விளையாடி சம்பியனாகவும் ஏ. எஸ். ஆம்ஸ்ரோங் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்

தொடர்ந்து ஆண் இரட்டையர் ஆட்டத்தில்இ.ஜெயசீலனும் க சுதர்சனும் சம்பியனாகவும், ஏ எஸ் ஆம்ஸ்ரோங்கும், கே தியாகேசனும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர்

கலப்பு ஆட்டத்தில் எவ. குண்டலகேசிசாந்தினியும் இ. ஜெயசீலனும் சம்பியன் ஆகவும், எஸ். சியாமலாவும் கே. தியாகேசனும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (05)

# 77 வயதான வயோதிபருக்கு தண்டனை விதித்து தீர்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ்எழுபத்தியேழுவயதான ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

ஓய்வூதியம் பெறுபவரும் பம்பலப்பிட்டிப் பகுதியை சேர்ந்தவருமான கந்தையா பாலசிங்கம் என்பவர் தகவல் கொடுக்கத் தவறிய குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் பத்து வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டபாலசிங்கம்1978-ம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் உயர் அதிகாரியாக பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டுநகரில் மர முத்திரிகை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த இவர் 1991 செப்டம்பரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார் இவர் 1992 ஜூன் 5-ம் திகதி பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டபோதும் வழக்கு தொடர்ந்து நடைபெற்றது.

ஏற்கனவே ஒன்பது மாதம் சிறையில் இருந்த 77 வயதான இவருக்கு பத்து வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனையை நீதிமன்றம் விதித்துள்ளது.

# மாணவி தாக்கப்பட்டார்

(கொழும்பு)

பாடசாலைக்குச் சென்ற மாணவி ஒருவர் பங்களாவில் இருந்த பூ ஒன்றைப் பிடுங்கி விட்டார். இதற்காக அந்த மாணவி தாக்கப்பட்டார். இதனை ஆட்சேபித்து மஸ்கெலியாப் பகுதியைச் சேர்ந்த ஒளண்டிலிட் குரூப் தோட்டத்தின் தொழிலாளர்களில் சுமார் 1300 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# இலக்கிய உரையரங்கு

அறவழி இலக்கிய பேரவை நடத்தும் மாதாந்த இலக்கிய உரையரங்கு இன்று மாலை 3.30 மணியளவில் கைதடி நுணாவிலுள்ள அறவழிபயிலகத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் [வரைவுள்ளது]

# அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,

## அங்கத்துவப்பட்டியல் முடிவுறுத்தல் 30 - 06 - 1994

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத்தேர்தல்கள்நடாத்துவதற்காக சகல கிளைகளிலும் உள்ள அங்கத்துவ இடாப்புகள் 30-06-94 உடன் முடிவுறுத்தப்படவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். முழுப்பங்கின் பெறுமதி ரூபா நூறு (100/-) ஆகும். எனவே முழு அங்கத்துவ பங்குப்பணத்தை கொண்டிராத அங்கத்தவர்களிடமிருந்து மீதி பங்குப் பணத்தை 30-06-94 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**முக்கிய கவனிப்பு:**

30-06-94 க்கு பின்னர் செலுத்தப்படும் பங்குப்பணங்களுக்குரிய அங்கத்தவர்களது பெயர்கள் கிளைக்குழுத் தேர்தலுச்குரிய அங்கத்துவப் பட்டியலில் இடம்பெறமாட்டாது என்பதனையும் எதிர்வரும்கிளைக்குழுத் தேர்தல் 30-06 94இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின்படி நடைபெறும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மா. புலேந்திரன் — தலைவர்

ஆ. நாகராசா — செயலாளர்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

(சி-9881)

# மொழி பெயர்ப்பாளர் தேவை

இலத்திரனியல் (Electronic) கணனி (Computer பௌதிகவியல் (Physics) ஆகிய துறைகளில் ஆங்கிலத்தில் உள்ள புத்தகத்தை தமிழில் மொழி பெயர்ப்பு செய்வதற்கு நன்கு அனுபவமுள்ள மொழி பெயர்ப்பாளர் உடன் தேவை சம்பளம் மாதம் 4000/-க்கு மேல் வழங்கப்படும். நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ உங்கள் தகைமைகளைக்குறித்து05-07-94க்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:- முழுநேரமாக, அல்லது பகுதிநேரமாக, வேலை செய்வதற்கு விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம்.

(8657)

# தென்னைச் செய்கை வழிகாட்டி

தென்னைச் செய்கை வழிகாட்டி என்ற ஒரு கை நூலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. வதிவிட வேளாண்மையாகவோ பெரிய அளவிலோ தென்னைச் செய்கையில் ஈடுபட உள்ள

# நினைவு கூருகின்றோம்...

## 26 06-1994

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-சாம்பல்தீவுப் பகுதியில் எமது முகாம்மீது சிறிலங்கா இராணுவம் முற்றுகையிட்டபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**சிறைச்செல்வன்** (கதிர்காமத்தம்பி தவராஜா - குச்சவெளி - திருமலை)

1987ஆம் ஆண்டு முள்ளியானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். மகேந்திரன்** (நடராசா நாகராசா - பெரிய தம்பனை, செட்டிகுளம் - வவுனியா)

வடமராட்சி கிழக்கு - மணற்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். கீர்த்தி** (பாக்கியநாதன் சுதர்சன் - குருவீதி காங்கேசன்துறை - யாழ்.)

1988ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நகுலன்** (-யுனைதீன்அட்டாளச்சேனை-அம்பாறை)

1989ஆம் ஆண்டு வவுனியா - ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சின்னமகேந்தி** (இராசரத்தினம் கிருபாமூர்த்தி - தென்னமரவடி - திருமலை)

**அச்சுதன்** (கணேஸ் - பன்குளம் - திருமலை)

வன்னிப் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளரான

**மேஜர் மாறன்** (சின்னத்துரை சுகுமார் - 129, கொல்விளாங்குளம் - வவுனிக்குளம் முல்லைத்தீவு)

**சுபன்** (இரத்தினம் அரியராசா - புதுக்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**பொபி** (தங்கராசா காந்தரூபன் - பொன்னகர், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**சபா** ( - சுந்தரலிங்கம் - முல்லைத்தீவு)

**லெப். அருள்** (சிதம்பரப்பிள்ளை தமிழரசன்- பத்தினியார்மகிழங்குளம் - வவுனியா)

**நவம்** (முத்துச்சாமி இந்திரகுமார் - மருதங்குளம், ஓமந்தை - வவுனியா)

**கேரவன்** (செல்லமுத்து ராஜிந்திரன் - பத்தினியார் மகிழங்குளம், வவுனியா

**கப்டன் ரூபன்** (இராசையா சிவகுமாரன்-ஆஸ்பத்திரி வீதி, கண்டாவளை - கிளிநொச்சி)

**அகிலன்** (சோமசுந்தரம் மதி ண்ணன் - இல 175, திருநகர் - கிளிநொச்சி)

**லெப். நித்திலா** (பவானி நல்லையா-கொம்மாந்துறை, கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். முரளி** (குணராசா குமாரதாஸ்-முத்தமிழ்வீதி, கொட்டடி - யாழ்.)

**விஜயன்** (-ரவிக்குமார் - யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு கொக்காவில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தாஸ்** (அருளம்பலம் சந்திரமோகன் - கரிப்பட்டைமுறிப்பு - முல்லைத்தீவு)

ளெண்டிலிட் குரூப் தோட்டத்தின் தொழிலாளர்களில் சுமார் 1300 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிசிலும் புகார் செய்யப்படடுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதே தொழிலாளர்களின் கோரிக்கை ஆகும் என்று தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கப் பொதுச் செயலாளர் ஏ.ஏ.இராமையா கூறியுள்ளார்.

பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த இவர் 1991 செப்டம்

நுணாவிவிலுள்ள அறவழிபயிலகத்தில் நடைபெறவுள்ளது.

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை 2-ம் குறுக்குத்தெரு, நாச்சிமார் கோவிலடியில் இரண்டரை பரப்புக் காணியில் அமைந்த நல்ல நிலையிலுள்ள (மூன்று அறை, குசினி, விறாந்தை, வீட்டுடன் இணைந்த குளியல்அறை மலசலகூடம் தண்ணீர்த் தாங்கி குழாய் அமைப்பு) வீடு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : கு. பஞ்சரத்தினம்
நாச்சிமார் கோவிலடி,
2-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(சி-9883)

தென்னைச் செய்கை வழிகாட்டி என்ற ஒரு கை நூலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. வதிவிட வேளாண்மையாகவோ பெரிய அளவிலோ தென்னைச் செய்கையில் ஈடுபட உள்ள வர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும் விருப்பமுள்ள. உண்மையான விவசாயிகள் எம்மிடம் தொடர்பு கொண்டு கை நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ பிரதிகள் இலவசம்,

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-9848)

## இறைச்சி கோழி

சுத்தம் செய்தும்
முட்டைகளும்
எந்நேரமும்
பெற்றுக்கொள்ள

**சுவையருவி**

கோழிப் பண்ணை
யாழ்ப்பாணம்.

(சி-9882)

## விற்பனைக்கு

கொழும்பு
சீமெந்து, வாட்பிளேட்
காவடி மார்க் கற்பூரம்

மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

C. M. சுகந்தினி
புதி. 309--157,
K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(8630)

3ஆம் ஆண்டு

## நினைவு கூருகிறோம்



மண்ணுலகில்:
25 - 02 - 1935

விண்ணுலகில்:
30 - 06 - 1991

திதி: 26-06-1994

அமரர்

**வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்**

(பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்)

'' கண்ணுக்கு கண்ணாக இருந்த அப்பாவே - நீங்கள்
கண்காணாத தூரம் போய் மூன்றாண்டு போனதோ ''
கண்ணுக்குள் உங்களை வைத்து - இன்றும்
கண் கலங்கி வாடுகிறோம்.

புகையிரத நிலையப்பக்கம்,
எழுதுமட்டுவாள். (8635)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## நினைவுக் காப்பு நிதியம்

★ பண்டிதமணி நினைவு விருது வழங்கல்

★ பண்டிதமணி நினைவுப் பேருரை

27-6-1994 திங்கட்கிழமை பி.ப. 3-00 மணி

யாழ். பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கு

★ "திருக்கேதீச்சர மான்மியம்" என்னும் நூலுக்கு விருது வழங்கி, நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

★ 'தமிழிலக்கியத்தில் இரண்டாவது பக்தியுகம்' என்னும் பொருளில், பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பண்டிதமணி நினைவுப் பேருரை நிகழ்த்துவார்கள்.

**அன்பர்கள், அறிஞர்கள், ஆர்வலர்கள்**
**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

திருநெல்வேலி
26-6-1994.
(8650)

அறங்காவற்குழு.

1990ஆம் ஆண்டு கொக்காவில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தாஸ்** (அருளம்பலம் சந்திரமோகன் - கரிபட்டை முறிப்பு - முல்லைத்தீவு)

**சங்கர்** (செல்லையா சந்திரகுமார் - கோணாவில் - கிளிநொச்சி)

வவுனியா - மன்னார் - யாழ். வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அசோக்** (கிருஷ்ணா செல்வராசா - இரணைஇலுப்பைக்குளம், கல்மடு - வவுனியா)

**மௌலீசன்** (கந்தசாமி யோகன் நித்திபநாதன்- பூவரசங்குளம் - வவுனியா)

**கணேசலிங்கம்** (ராக்கப்பன் நாகராஜ் - சிறிராமபுரம், மாறம்பைக்குளம், வவுனியா)

**நித்திலன்** (நா. குணராசா -வவுனியா)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அன்ரனி** (விசுவர் நாகலிங்கம் - குணராசா - கெற்பலி, மிருசுவில், யாழ்)

அம்பாறை - காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டோரில் சடலங்களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள், தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழிளைஞர்கள்

மட்டு - ராஜபுரம், கரடியனாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப்பெண், துறைநீலாவணை - சவளைகட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 06 தமிழர்கள்

யாழ் - கொக்குவில் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 06 குழந்தைகள் உட்பட 07 தமிழர்கள்

1991-ம் ஆண்டு மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்,

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9880)

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டி; துடுப்பாட்டத்தில் இன்றைய நாயகர்கள்



" இன்று யாழ்ப்பாணத்தில் பல்துறை விளையாட்டுகளிலும் இள வயதுகளின் இணைவு மிக அதிகமாகும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 15, 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இவ்வகையில் குறிப்பிடத்தக்க தொன்று. ஆற்றல்கள் வேகமாக வேர் கொள்ளும் பருவம் இது. இவ்வகையில் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் இளம் சிறார்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன் படுத்தி இவர்களில் முதன்மை பெற்றுத் திகழ்பவர்கள் சிலர் இவ்வகையில் 15 - 17 வயதுக்குட்பட்ட போட்டிகளில் இப்பருவத்தில் சதம் போட்டுச் சாதனை புரிந்துள்ளவர்களைப் பற்றிய சிறப்புக் குறிப்புகளை விளையாட்டு ரசிகர்களுக்கு இங்கு தருகின்றோம். இளம் வீரர்களைச் சந்தித்து உரையாட அனுமதித்த அதிபர்கள், மற்றும உடனிருந்து உதவிய பயிற்றுநர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். "


## கா. சசிகரன்



கொக்குவில் இந்துக் கல்லூரி 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் தலைவராகத் திகழ்பவர் கா. சசிகரன். இவர் இம்முறை தன்வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான போட்டியொன்றில் 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். 17 வயதுக்குட்பட்ட பிரிவில் இவ்வெண்ணிக்கையே அதிகூடிய எண்ணிக்கை என்றதொரு கருத்தும் நிலவுகின்றது. 01-09-77 இல் பிறந்த இவர் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் 3 வருடங்கள் ஆடியவர். தற்போது இப்பிரிவில் இரண்டாவது வருடமாக ஆடிக் கொண்டிருக்கின்றார். இவரது சாதனைப் பட்டியல் சிறிது நீளமானது. தன் வயதுப் பிரிவில் பெற்ற 172, 10 ஆறுகளையும், 22 நான்குகளையும் கொண்டமைந்திருந்தது. 94 இல் கல்லூரி 19 வயதுக்குட்பட்ட அணியின் முன்னணி வீரர்களுள் ஒருவர். இந்த வகையில் மகாஜனாக் கல்லூரிக்கு எதிராக 133, யாழ். இந்துச் கல்லூரிக்கு எதிராக 72, ஸ்ரான்லிக் கல்லூரிக்கு எதிராக 47 என்றவாறு ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் சகல துறைகளிலும் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளார். வலதுகைத் துடுப்பாட்ட வீரராகிய இவர், அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராவார். ஆரம்ப துடுப்பாட்ட வீரரின் பணி மிகக் கடுமையானது. அந்த வகையில் இவர் இந்த இடத்தை சிறப்பாகவே நிரப்புகின்றார். அணியின் சுழல் பந்து வீச்சாளராகவும் இருக்கும் இவர் சிறந்ததொரு பந்துக் காப்பாளரும் ஆவார். தன் வயதுப் பிரிவில் இதுவரை 3 இலக்குகளைச் சரித்திருக்கும் இவர்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## ப. சிவனேசன்



17 வயதிற்குட்பட்ட பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் ப. சிவனேசன் 103 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருக்கின்றார். 1.11-1978இல் பிறந்த இவர் தனது சதத்தைத் தனது கல்லூரி மைதானத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்தில் பெற்றிருக்கின்றார். இதில் 14 நான்குகளும் அடக்கம். மூத்தோரைக் கண்டதும் மிக அடக்கத்துடன் உரையாடும் இவர் புதியவர்களைக் கண்டதும் உரையாட வெட்கப்படுகின்றார். தற்போதைய அணியின் விக்கெட் காப்பாளர் இவர் என்பதும், '93 15 வயதுக்குட்பட்ட அணியின் தலைவர் இவரென்பதும் பயிற்றுநர் மூலமே அறிந்து கொள்ள முடிந்தது. 15 வயதிற்குட்பட்ட அணியில் இரண்டு வருடங்கள் அங்கம் வகித்த இவர் இவ்வருடம் முதன் முறையாக 17 வயதிற்குட்பட்ட பிரிவில் ஆடுகின்றார். வலதுகைத் துடுப்பாட்ட வீரராகிய இவர் அணியின் 3-ம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஆவார். இந்த வரிசை ஏறத்தாழ ஆரம்பத் துடுப்பாட்ட வீரரின் கடமையைத் தன்னகத்தே கொண்ட கடினமானதொரு நிலையைக் காட்டுவதாகும். இந்நிலையில் பெறப்படும் சதங்கள் மிகுந்த கவனத்துக்குரியவை. இம்முறை தமது பாடசாலை மட்டத்தில் ஓட்ட எண்ணிக்கைச் சராசரியில் இவரே முதன்மை பெற்றவராகக் காணப்படுகின்றார். அடுத்த வருடமும் 17 வயதிற்குட்பட்ட பிரிவிலேயே ஆடத் தகுதியான இவர், 17 வயதுப் பிரிவின் கன்னி அறிமுகத்திலேயே சதம் போட்டிருப்பது பாராட்டிற்குரியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு அரங்கு

## உலக முன்னணி வீரர்களில் ஒருவரான றொமாரியோ

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பிக்குமுன்னரே ஒரு சில நாடுகளின் பெயர்கள் வெற்றிக்கிண்ணத்துடன் இணைத்து பேசப்பட்டன. அதில் ஒன்று பிரேசில் இதேபோல ஒருசில வீரர்களின் பெயர்களும் உச்சத்திறமையுடன் தொடர்பு படுத்திப்பேசப்பட்டன ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த மரடோனா, படிஸ்டுவா, கொலம்பியாவைச் சேர்ந்த ஆஸ்பகில்லா. வல்டெராமா ஜேர்மனியைச்சேர்ந்த லொதர் மத்தாயஸ், கிளீன்ஸ்மன், பிரேசிலைச் சேர்ந்த பெபேடோ, றொமாரியோ ஆகியோர் அவர்களுள் சிலர். இவர்களில் முதல் இடம் என்று வரும் போது அந்த மிகச்சிலரில் றொமாரியோவும் ஒருவர் என்பது விமர்சகர்களின் கணிப்பு.

1990 உலகக்கிண்ணப் போட்டிகளில் இவர் பெரிதும் பேசப்பட்டாலும், முழுமையாக இவரால் கலந்து கொள்ள இயலவில்லை காரணம் இவரின் காலில் ஏற்பட்ட முறிவாகும் '94 உலகக்கிண்ணத்துக்கான தெரிவில் இவருக்கிணையான ஒருவரை அணி முகாமையாளர் தேடியது உண்மை இவர் அணியில் இருந்து தவிர்க்கப்படுவதை பல்வேறு காரணங்களால் சிலர் விரும்பியிருக்கக்கூடும் ஆனால் தகுதிகாண் போட்டிகளின் போது பிரேசில் சிறிது தளர்ந்த நிலையில் இருந்தபோது இறுதியாட்டமான உருகுவேயுடன் ஆட இவர் அழைக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் பொறுப்பாளருக்கு ஏற்பட்டது. அதற்குக்காரணம் இவரது திறமை அவர் தன் திறமையை உருகுவே நாட்டுக்கு எதிராக இரண்டு கோல்கள் போட்டு நிரூபித்ததுடன் உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்கும் பிரேசிலை தகுதியான நாடாக்கினார் '90 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கும், பல பிரச்சினைகளின் மத்தியில் தன் திறமையொன்றாலேயே அணிக்குள் நுழைந்தவர் என்பது கவனிக்கத்தக்கது.

1938 ஒலிம்பிக் போட்டிகளில்தான் சர்வதேச ரீதியாக இவர் அறியப்பட்டார் இதில் மொத்தம் 7 கோல்கள் போட்டதுடன் அவுஸ்திரேலியாவிற்கெதிராக தனித்து மூன்று கோல்களையும் போட்டார். பின்னர் பிரேசிலின் வாஸ்கோ அணியில் ஆடிய றொமாரியோ நெதர்லாந்தின் PSV ஈன்தொவன் அணிக்கு மிகப் பெருந்தொகைப் பண அன்பளிப்புடன் அழைக்கப்பட்டார் நெதர்லாந்து நாட்டின் ஈன்தொவன் அணிக்காக இவர் பெற்றுக்கொடுத்த கோல்கள் 125 தற்போது ஸ்பானிய பார்சலோனா அணியின் தவிர்க்க முடியாததொரு வீரர் றொமாரியோ. தற்போது 28 வயது மட்டுமே கொண்ட றோமாரியோ இம்முறை அற்புதமாக ஆடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது இதனை அவர் ரஷ்யாவிற்கு எதிரான ஆட்டத்திலும் கமரூனுக்கு எதிரானஆட்டத்தின் மூலமும் நிரூபித்துள்ளார்.

## உலகக் கிண்ணப் போட்டி; நாடுகளின் நிலை

(உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 24-06-94 வரை இடம் பெற்ற ஆட்டங்களின்படி நாடுகளின் நிலை)

| பிரிவு 'A' | விளையாடிய போட்டிகள் | வெற்றி | தோல்வி | டிரா | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| ஐ. அமெரிக்கா | 2 | 1 | — | 1 | 4 |
| சுவிட்சர்லாந்து | 2 | 1 | — | 1 | 4 |
| கொலம்பியா | 2 | — | 2 | — | 0 |
| ருமேனியா | 2 | 1 | 1 | — | 3 |
| பிரிவு 'B' | | | | | |
| கமரூன் | 2 | — | 1 | 1 | 1 |
| சுவீடன் | 2 | 1 | — | 1 | 4 |
| பிரேசில் | 2 | 2 | — | — | 6 |
| ரஷ்யா | 2 | — | 2 | — | 0 |
| பிரிவு 'C' | | | | | |
| ஜேர்மனி | 2 | 1 | — | 1 | 4 |
| பொலிவியா | 2 | — | 1 | 1 | 1 |
| ஸ்பெயின் | 2 | — | — | 2 | 2 |
| தெ. கொரியா | 2 | — | — | 2 | 2 |
| பிரிவு 'D' | | | | | |

சிறந்ததொரு பந்துக் காப்பாளரும் ஆவார். தன் வயதுப் பிரிவில் இதுவரை 3 இலக்குகளைச் சரித்திருக்கும் இவர்,


(4ஆம் பக்கம் பார்க்க)

இவர், 17 வயதுப் பிரிவின் கன்னி அறிமுகத்திலேயே சதம் போட்டிருப்பது பாராட்டிற்குரியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெ. கொரியா | 2 | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| **பிரிவு 'D'** | | | | | |
| ஆர்ஜென்டீனா | 1 | 1 | — | — | 3 |
| கிறீஸ் | 1 | — | 1 | — | 0 |
| நைஜீரியா | 1 | 1 | — | — | 3 |
| பல்கேரியா | 1 | — | 1 | — | 0 |
| **பிரிவு 'E'** | | | | | |
| இத்தாலி | 2 | 1 | 1 | — | 3 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | — | 3 |
| நோர்வே | 2 | 1 | 1 | — | 3 |
| மெக்சிக்கோ | 2 | 1 | 1 | — | 3 |
| **பிரிவு 'F'** | | | | | |
| பெல்ஜியம் | 1 | 1 | — | — | 3 |
| மொறோக்கோ | 1 | — | 1 | — | 0 |
| நெதர்லாந்து | 1 | 1 | — | — | 3 |
| சவூதி அரேபியா | 1 | — | 1 | — | 0 |

எதிரான ஆட்டத்திலும் கமரூனுக்கு எதிரான ஆட்டத்தின் மூலமும் நிரூபித்துள்ளார்.



## K. சஞ்சயன்



15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இதுவரையில் பெறப்பட்டுள்ள ஒரேயொரு சதம் பரி. யோவான் கல்லூரி வீரர் K. சஞ்சயனால் பெறப்பட்டதாகும். இவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். மிகுந்த கூச்சத்துடன் புன்சிரிப்பு மாறாமல் உரையாடும் இவர் 06 . 04 . 79 ல் பிறந்தவர் இவ்வருடம் 15 வயதுக்குட்பட்ட அணியில் இவர் ஆடுவது இரண்டாவது ஆண்டாகும். வலதுகைத் துடுப்பாட்ட வீரராகிய இவர் அணியில் அறிமுகமாகியது ஆரம்பத்துடுப்பாட்ட வீரரகவாகும். இம்முறை இவர் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக 66 ஓட்டங்கள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவரது பயிற்றுநரின் ஆலோசனையின் படி ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் இருந்து தன்னை 7 ம் இலக்க மத்திய வரிசை ஆட்டக்காரராக மாற்றிக்கொண்டார். அதன் பின்பே 113 மற்றும் 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததென்றும் இவர் நன்றியுடன் பயிற்றுநரை நோக்குகின்றார். தான் இது வரை சந்தித்த எந்தப் பந்துவீச்சாளரும் தனக்குச் சவாலாக இருக்கவில்லையென்று கூறுகின்றார். இவர் மிட்ஒன், மிட்ஒவ் திசைகளில் வேகமாக பந்தைச் செலுத்தும் ஆற்றல் பெற்றவர். சுமாராக பந்து பிடிக்கும் ஆற்றலை தற்போது வேகமாக வளர்த்துவரும் இவர் பற்றி பயிற்றுநர் கூறும்போது ''இவர் வேகமாக அடித்தாடும் வீரர்தான் ஆனால் நம்பகமான துடுப்பாட்டவீரர். அதோடு பந்து வீச்சாளர்களை இலகுவாகக் கையாள்வதன் மூலம் அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வி. எஸ். நிர்மலானந்தன்



இவ்வருட 17 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது சதத்தைப்பெற்ற வீரர் என்ற பெயரைத் தட்டிச் செல்கின்றார். பரி. யோவான் கல்லூரியைச்சேர்ந்த வி. எஸ். நிர்மலானந்தன். இவர் யூனியன் கல்லூரிக்கு எதிராக 100 ஓட்டங்களை ஆட் மிழக்காமல் பெற்றிருக்கின்றார். மேலும் மகாஜனாக் கல்லூரிக்கு எதிராக 63 ஓட்டங்களையும் பெற்றிருக்கின்றார் இவ்வருடம் கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட அணிக்குத் தலைவராக இருக்கும் இவர் 16-01-77ல் பிறந்தவர். அணியின் விக்கெட்காப்பாளரும் இவரே. 15 வயதிற்குட்பட்ட பிரிவு முதலே தொடர்ந்து ஆடிவரும் இவர், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் மூன்றாவது வருடமாக ஆடிக்கொண்டிருக்கிறார். இவ்வருட 19 வயதுக்குட்பட்ட அணியிலும் கல்லூரிக்காக ஆடியவர். வலது கைத்துடுப்பாட்ட வீரராகிய இவர் அணியின் 3ம் இலக்க துடுப்பாட்டவீரராவார். தொடக்க ஆட்டக்காரர் நலிவுறும் போது அந்த இடத்தை நிரவி ஆட்டத்தை வளர்த்தெடுத்துச் செல்லும் பணி இல 3க்கு உரியது இதனை மிகத்திறம்படச் செய்பவர் இவர் என்கிறார் இவரின் பயிற்றுநர். இவர் தனது சதத்தை தன் கல்லூரி மைதானத்திலேயே பெற்றுக்கொண்டார். தன் கிரிக்கெட் வாழ்க்கையில் பெற்ற முதலாவது சதம் இது என்ற வகையில் என்றும் இனிய நினைவாக இது இருக்கும் என்கிறார் ஆட்டத்திற்கு ஆட்டம் தன் விக்கெட் காப்புப்பணியில் முன்னேற்றம் காண்பதாகக் கூறும் இவர் எவ்வகைப் பந்து வீச்சையும் மைதானத்தின் எத்திசையிலும் அடித்தாடும் திறமை பெற்றவர். இதுவரை

(4ஆம் பக்கம் பார்க்க)

# உலக கிண்ண உதைபந்தாட்டம்

## (24-06-94 வரையான போட்டி பற்றிய சில குறிப்புகள்)

### பிரிவு 'A'

★ ஐ. அமெரிக்கா - சுவிட்சர்லாந்து 1-1,
இரு அணிகளும் முனைப்புடன் விளையாடிய சராசரியாக அமைந்ததொரு ஆட்டம்.

★ ரூமேனியா - கொலம்பியா 3-1
இப்பிரிவில் முன்னணி நாடாக எதிர்பார்க்கப்பட்ட கொலம்பியா ரூமேனியாவிடம் தோற்றது வியப்புக்குரியதாகும்.

★ சுவிட்சர்லாந்து - ரூமேனியா 4-1,
சுவிட்சர்லாந்து மிகத் திறமையாக ஆடியது.

★ ஐ அமெரிக்கா - கொலம்பியா 2-1,
பலவீனமானநாடு எனக் கணிக்கப்பட்ட ஐ. அமெரிக்கா கொலம்பியாவைத் தோற்கடித்தமை அதிர்ச்சிக்குரியது.

### பிரிவு 'B'

★ கமரூன் - சுவீடன் 2-2,
இறுதிவரையில் மிகப் பரபரப்பாக நடைபெற்ற ஆட்டமாகும்.

★ பிரேசில் - ரஷ்யா 2-0,
பரபரப்பான ஆட்டமாக இருந்தது. பிரேசிலின் சீரான ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

★ பிரேசில் - கமரூன் 3-0,
ஆரம்பத்தில் போட்டி விறுவிறுப்பாகவும், கமரூன் தீவிரமாக விளையாடியும் வந்தது. பிற்பகுதியில் பிரேசில் கை வலுவாக ஓங்கியது.

★ சுவீடன் - ரஷ்யா 3-1,
முதற்சுற்றின் இரண்டாவது போட்டியிலும் ரஷ்யாவால் சோபிக்க முடியவில்லை.

### பிரிவு C

★ ஜேர்மனி - பொலிவியா, 1 - 0
ஜேர்மனி வெற்றியீட்டிய போதும் குறிப்பிடத்தக்க ஆட்டமாக அமைந்திருந்தது பொலிவியா ஆட்டமாகும்.

★ ஸ்பெயின் - தென் கொரியா 2 - 2,
மிக விறுவிறுப்பான ஆட்டம் இறுதிவரை முன்னணியில் இருந்த ஸ்பெயினுடன் இறுதி நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக தென்கொரியா கோல்களைப் போட்டு சமமாக்கியது. ஆசியாவின் உதைபந்தாட்ட தரம் உயர்ந்து வருகிறது என்பதை தென்கொரிய ஆட்டம் வெளிப்படுத்தியது.

★ ஜேர்மனி - ஸ்பெயின் 1 - 1,
முன்னாள் உலக சாம்பியன் ஜேர்மனியுடன் ஸ்பெயின் வெகு திறமையாக மோதியது. ஸ்பெயின்

(4 ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்புச்சபை உறுப்பினர் கொரியாவுக்கு வழங்கமுடிவு

## போட்டியிலிருந்து விலக சிறிலங்கா இணக்கம்

(கொழும்பு)

ஐ. நா பாதுகாப்புச்சபையில் பார்வையாளர் அந்தஸ்துக்கான ஆசியநாடுகள் மத்தியிலான போட்டியில் சிறிலங்கா தான் போட்டியிலிருந்து விலகி அவ்வந்தஸ்தை தென்கொரியாவிற்கு விட்டுக் கொடுக்க இணங்கியுள்ளது.

பாதுகாப்புச்சபை ஆசியா உறுப்பினர் பதவிக்காக சிறிலங்காவிற்கும், தென்கொரியாவிற்கும் இடையில் கடும் போட்டி முன்னர் நிலவிவந்தது. எனினும் இப்போது சிறிலங்கா போட்டியை கைவிட்டு தென்கொரியா பாதுகாப்புச்சபையில் இடம்பெற தாம் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

போட்டியிலிருந்து சிறிலங்காவை விலகுமாறு கொரியா சிறிலங்காவின் உயர்மட்டத் தலைவர்களை வேண்டியதாகவும் அண்மையில் பிரதமர் ரணில் கொரியா சென்றபோது இது குறித்து இருநாட்டுப் பிரதமர்களும் பேச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச சதிகார கூட்டம்; சு. க. மீது கண்டனம்

(கொழும்பு)

சர்வதேச சதிகார கூட்டத்தின் வதிவிடம் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகும்- இவ்வாறு சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி ஐ தே. கவில் இணைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ நியதபால கூறியுள்ளார்- அவர் மேலும் கூறுகையில்; இதனால் மக்களுக்கு சேவை செய்ய முடியாதுள்ளது- எனவே தான் ஐ.தே. கவில் சேர்ந்துள்ளேன் எனவும் குறிப்பிட்டார்-

அவரைத்தொடர்ந்து கொழும்பு மத்திய தொகுதியின் சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹலிம் இஷாக் பேசிய போது சுதந்திரக் கட்சி தலைமைப்பீடத்தின் போக்கைக் கண்டித்தார் இந்த நிலையில் சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த ரிச்சாட் பத்திரான மற்றும் ஸ்டான்லி சேனநாயக்க போன்றோர் குறுக்கிட்டுப் பேசினர். இதனால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து சபாநாயகர் சபையை இருபது நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்-


## கணக்காய்வாளர்தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு ஒரு கணக்காய்வாளர் உடன் தேவை ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமிக்கவர்கள் தகுந்த சான்றிதழ்களுடன் 27-06-94 திங்கட்கிழமை காலை 9—11 வரை நேரில் வரவும் வயதெல்லை 25 முதல் 40 வரை.

அழகியல் உதிரிப்பாகமாடம்
71, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(8651)


# இரவு நேர மேலதிக வகுப்பு அச்சுவேலி ம.வி. ஏற்பாடு

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இரவு நேர மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. பாடசாலை மாணவரின் இணைக்கலைத் திட்டப் பாடங்களான உடற்பயிற்சி மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள், நாடகப் பயிற்சியுடனான கராசாரப் பயிற்சி நெறிகள் என்பவற்றில் மாலை நேரங்களில் பயிலும் மாணவர்களினதும் தனியார் கல்வி நிலையங்களில் மேலதிகமாக கற்க வசதியற்ற மாணவர்களினதும் நன்மை கருதி பரீட்சைக்காக ஆயத்தப்படுத்தும் நடவடிக்கையாக இவ் வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கல்லூரியில் மெல்லக் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி அவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகளும் முதலாந்தவணை விடுமுறைக் காலத்தில் இருந்து ஆரம்பமாகி வருடம் முழுவதும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனால் கீழ் வகுப்புக்கள் தொடக்கம் மேல் வகுப்புக்கள் வரை கல்வியில் மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு புதிய பயிற்சிகள் வழங்கி அவர்களை வருட முடிவில் ஏனைய மாணவருடன் இயைபுபடத் தக்கவாறு பயிற்றுவிக்க முடியும் என தமிழ்த்துறைப் பொறுப்பாசிரியர் தெரிவித்தார்.

## பாப்பரசர் தினம் அனுட்டிப்பு

(நல்லூர்)

உலக கத்தோலிக்கர்களின் தலைவராக உள்ள 2ம் அருள் சின்னப்பர் பாப்பரசர் தினத்தை இம்முறை யாழ். பேராலயம் ஆடி 3-ம் திகதி யாழ். பேராலயத்தில் பெருவிழாவாகக் கொண்டாட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.


அன்றையதினம் 4. 30மணிக்கு யாழ்- பேராலய மரியன்னை பேராலயத்தில் சிறப்புத் திருப்பலி யாழ்- ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து பேராலய கலை அரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன.

(17)

## மீளப்பெற முடியாநிலை

மூதூர் பகுதியிலுள்ள கிராமிய வங்கிகளில் நகைகளை அடைவுவைத்த மக்கள் அவற்றை மீளப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக கூறப்படுகிறது.

## 5-ம்ஆண்டுநினைவலைகள்



### மேஜர் மாறன்

(சி. சுகுமாறன்)

பிறப்பு: 23 - 06 - 1961

வீரச்சாவு: 26 - 06 - 1989

ஏற்றம்மிகு மாவீரர் பாதமதில் போற்றியிங்கு,
எழுச்சிக் கவி பாடுகிறோம்.
தாரக மந்திரமாம் தங்கத் தமிழீழமதை,
தடை கடந்தும் நிலைநாட்ட
உம் வழியிற் செல்கின்றோம்.

- ஆருயிர்த் தங்கை

உன் நினைவுடன் வாழும்.
அன்பு அம்மா, தங்கைமார்,
தம்பி, மைத்துனர்.

சரசாலை,
சாவகச்சேரி.
(சி-9832)


தாய்மார்களுக்கு நற்செய்தி
பளிச்சிடும் வெண்மையை
தந்திடும் ஒரே நீலம்

★ றோயல் நீலம் ★

- பள்ளிக் குழந்தைகளின் ஆடைகளுக்கு பளிச்சிடும் வெண்மையை தருவது.

றோயல் நீலம்

- வீட்டுத் தலைவன் விரும்பி வாங்கி வருவது

றோயல் நீலம்

- ஆடைகளுக்கு எந்தவித ஊறும் விளைவிக்காமல் பட்டென பளிச்சிடுவது

றோயல் நீலம் ஒன்று தான்.

தமிழீழத்தில் உத்தரவாதம் பெற்றது
றோயல் நீலம் என்பது பெருமைக்குரியது.

சில்லறை விலை ரூ. 6.50 மட்டுமே

சந்தைப்படுத்துவோர்:

றோயல் இன்டஸ்றீஸ்,

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(சி 9597)


# உலக கிண்ண

சந்தர்ப்பங்களை இழந்தமை சமமான முடிவுக்குக் காரணமாயிற்று.

★ தென்கொரியா : பொலிவியா 0 - 0
மிக நல்ல நிலையில் நடைபெற்றதொரு ஆட்டம்.

### பிரிவு D

★ ஆர்ஜெண்டீனா - கிறீஸ 4 - 0
ஆர்ஜென்டீனா சார்பானதாகவே முழு வேளையும் ஆட்டம் அமைந்திருந்தது.

★ நைஜீரியா - பல்கேரியா 3 - 0,
நைஜீரியாவின் வெற்றி உறுதியானதாயினும், பல்கேரியாவின் ஆட்டம் அபரிமிதமாக இருந்தது.

### பிரிவு 'E'

★ அயர்லாந்து - இத்தாலி 1-0
உலக முன்னணி நாடுகளுள் ஒன்றாகக் கருதப்பட்ட இத்தாலி எதிர்பாராத தோல்வியைத் தழுவியது. இத்தாலிய ஆட்டம் சோபிக்கவில்லை.

★ நோர்வே - மெக்சிக்கோ 1-0
விறுவிறுப்பான ஆட்டமாக இது அமைந்திருக்கவில்லை.

★ இத்தாலி - நோர்வே 1-0
கடும் போட்டியின் பின்பே இத்தாலி வெற்றிபெற்றது நோர்வே செய்த தவறு இத்தாலிக்கு வாய்ப்பாக அமைந்தது.

★ மெக்சிக்கோ - அயர்லாந்து 2-1
இத்தாலியை வெற்றி கொண்ட அயர்லாந்துக்கு மெக்சிக்கோ எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்தது.

### பிரிவு 'F'

★ பெல்ஜியம் - மொறோக்கோ 1-0
இருதரப்பினருடையதும் மிக நேர்த்தியான ஆட்டம் மொறோக்கோ தோல்வியைத் தழுவினும் அதன் ஆட்டம் மிக உயர்நிலையில் இருந்தது.

★ நெதர்லாந்து - சவூதி அரேபியா 2-1
பலமான ஐரோப்பிய அணியுடன் குறிப்பிடத்தக்க அளவில் சவூதி அரேபியா மோதியது. உலகக் கிண்ணப் போட்டியில் சவூதி அரேபியா முதன் முறை பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டம்

யாழ்- றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ

## பாடசாலை மட்டத்திலான

ப சிவனேசன்

ஒட்டங்கள் சேகரிப்பதில் மிக நிதானம் காட்டும் இவர் பந்து வீச்சாளர்களை மிக அவதானமாகக் கையா



## 2 ம் லெப்.சூரன்

(செல்வன் செல்லத்துரை தர்சன்)

தாயின்மடியில்: 10-09-1977

வீரச்சாவு: 28-03-1994

தலைமுறை தலைமுறையாய்த்
தடியாட்சிக் கொடுமைக்குத்
தலைவணங்கிப் பலியாகி
தமிழினம் தேய்ந்து ஈற்றில்
இலையாகிப் போவதுவா
என்றெழுந்த இளம் புலியே
உலையாத உறுதியுடன்
ஓ ''சூரன்'' எனும் பெயரில்
பூநகரி மணலாற்று வெற்றிகளில்
விண்போற்றும் விறல்காட்டி
வீழ்ந்தவனே உன்நினைவை
நாம் மறத்தல் கூடுவதோ
நாமென்ன தலைமுறைகள்
தாம் கூட ஏற்றுமடா

மண்மீட்புப் போரில் வீரச்சாவடைந்த எமது மகன் தர்சனின் இறுதிக் கிரிகைகள் அளவெட்டியில் 30-03-94 அன்று நடைபெற்றது இந்நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று வவுனியாவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரிகைகளின் போது அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்,

தந்தை: செல்லத்துரை, தாய்: சந்திரவதனா,
சகோதரர்கள்: தயாளன், தயாநிதி, தயாரூபன், நிசாழினி

பண்டாரிகுளம்,
வவுனியா. (8637)


## ஜென்சி மியூசிக் சென்ரர்

இசைப் பதிவுக்கென்றே இன்றைய இணையில்லா நிறுவனம்

## ஜென்சி மியூசிக் சென்ரர்

★ நீங்கள் விரும்பும் எந்தப் பாடல்களாக இருந்தாலும் கொம்பாக்டிஸ்க் மூலம் அனுபவமிக்க வல்லுனர்களைக் கொண்டு உடனுக்குடன் பதிவு செய்திடவும்,

★ மற்றும் மங்களகரமான வைபவங்களை நவீன முறையில் வீடியோ படப்பிடிப்பு செய்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

ஜென்சி மியூசிக் சென்ரர்

இல. 17, பழைய பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.

(சி-9878)


எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்-பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மாலை 3 மணிக்கு சென் அன்ரனிஸ் எதிர் ஸ்கந்தா ஐ. வி. க. மாலை 4மணிக்கு யங்கென்றிஸ் எதிர் பொற்பதி என்பன நடைபெறும்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வரணியூர் பண்டித வித்துவான் ஆ. சின்னத்தம்பி எழுதிய ''ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு வரணி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

வரணி முத்தமிழ் மன்றத்தினரால் நடாத்தப்படும் இவ்வெளியீட்டு விழாவிற்கு வரணி மகாவித்தியாலய அதிபர் சி. துரைராசா தலைமை தாங்குவார். (05)


## கலா அழகுக் களஞ்சியம் அழைக்கிறது

ஆச்சரியப்படாதீர்கள்!

உங்கள் மனம் கவர்ந்த அழகு மாளிகை

பெஷன் ஹவுஸ்

## ★ கலா அழகுக் களஞ்சியம் ★

ஆக மாற்றமடைந்துள்ளது.

பெயரில் மாற்றம்! தரத்தில் ஏற்றம்!! விலையில் நிதானம்!!!

மீண்டும் நினைவூட்டுகிறோம்.

கலா அழகுக் களஞ்சியம்
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9854)


இவர் பந்து வீச்சாளர்களை மிக அவதானமாகக் கையாளபவர். இம்முறை நடைபெறும் சுற்றுப் போட்டியில் சில சிறந்த பந்துவீச்சாளர்களைச் சந்தித்ததாகக் கூறும் இவர் தன்னை சிறிது தடுமாற வைத்த பந்துவீச்சாளர் என்றால் கொக்குவில் இந்துக்கல்லூரி வேகப்பந்து வீச்சாளர் ப. சசிகரன் மட்டும்தான் என்கிறார்.

இவரைப் பற்றிக் கருத்துக் கூறுகையில், ''இவர் பயிற்சிக்கு மிக ஒழுங்காக வருபவர். அதோடு பயிற்சியின் போது அதில் தனது முழுக் கவனத்தையும் தீவிரமாகச் செலுத்துபவர்'' என்கிறார் இவரது பயிற்றுநர். முதன் முறையாக விக்கெட் காப்பாளராகக் கடமையாற்றும் இவர் அதன் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு வேகமாக முன்னேறி வருகின்றார். நாற்பதுகளைக் கடக்கும் போதோ, அல்லது சதத்தை அண்மிக்கும்போதோ இவர் எவ்வித பதற்றத்தையும் காட்டாமை எதிர்காலத்தில் இவரின் துடுப்பாட்டத் திறமை இன்னும் அதிகரிக்கும் என்பதையே காட்டுகிறது என்பது பயிற்றுநரின் கருத்து.

### K சஞ்சயன்

களைச் சலிப்புறச் செய்துவிடுவார்' என்கிறார் மழலை முகம் மாறாத இவர் புலன் ஒன்றிணைப்பு, அவதானம், அதற்கேற்ற மனப்பக்குவத்தை ஏற்படுத்தல் என்பவற்றின் மூலம், மிகக் கடுமையானதான சதம் ஒன்றினைப் பெற்றிருக்கின்றார்.

இவர் எவ்வாறு கல்வியில் ஆர்வம் செலுத்திவருகிறாரோ அதே போல பயிற்சியிலும் தீவிரமாக ஈடுபடுவர் என்கிறார்கள் இவரின் நண்பர்கள். புன்சிரிப்பு மாறாமல் அமைதியாக நிற்கிறார் சஞ்சயன்

### வி. எஸ். நிர்மலானந்தன்

தான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் மதுசூதனன் தன்னைச்சிறிது அசைவுறச்செய்து விட்டார் என்கிறார். இவரது சதம் பற்றி இவரின் பயிற்றுநர் கருத்துக்கூறுகையில் ''40களின் பிற்பகுதியில் அல்லது சதத்தை அண்மிக்கும் போதோ எவ்வித சலனமும் காட்டாமல் தன்நம்பிக்கையுடன் விளையாடினார். இவரது சதம்திறமையானதொன்று. அதோடு ஆர்வத்துடன் பயிற்சி பெறுவது இவரது இயல்பு'' என்கிறார்.

### கா. சசிகரன்

19 வயதிற்குட்பட்ட பிரிவில் 18 இலக்குகளைச் சரித்தவர். சிறிய வயதில் நிறைந்த அனுபவத்தைப் பெற்றுள்ள இவர் புறவாழ்க்கையில் மிகுந்த கூச்ச சுபாவத்தோடு காணப்படுகின்றார். பணிவான இவர் தன்னைப் பற்றிக் கூற வெகுவாகக் கூச்சப்படுகின்றார். ஆனால் மிக வேகமாக பந்தை அடித்து ஆடும் ஆற்றல் பெற்றவர். பொதுவாக தான் சந்தித்த பந்து வீச்சாளர்களை இலகுவாகக் கையாண்டதாகக் கூறும் இவர், தன்னைச் சிறிது சங்கடப்படுத்திய பந்து வீச்சாளர் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கிரிதரன் என்கிறார். தனது துடுப்பாட்ட திறமைக்குத் தன் பயிற்றுநருக்கு நன்றி கூறும் சசிகரன் இன்னும் சிறப்பாக துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். ''இவரது பணிவும், இவ பயிற்சியின் ஆர்வமும், செயற்படும் மனப்பாங்கும் ரது வெற்றிக்குக் காரணம்'' என்கிறார் இவரின் பயிற்றுநர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

சிந்தனைக்கு..

ஆசை, வெறுப்பு, மனமயக்கம்
இவையே தீயதின் வேர்கள்.
- கௌதம புத்தர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2024
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 26-06-94
தபால் பெட்டி எண்- 05

## தேர்தல் நடத்த டி. பி. புதிய வழி தேடுகிறார்

அவசர அவசரமாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டு விட்டது. ஆனால், சிறிலங்கா தனக்கு இறைமையுள்ளதாகக் கூறிக் கொள்ளும் வடக்கு கிழக்கில்-விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்-தேர்தல் நடத்துவது குறித்து இன்னமும் தீர்க்கமான முடிவு எதையும் அறிவிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமையினால், வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்தாமலே புதியஅரசாங்கத்தை அமைக்க முடியும் என்பது தெரிந்த விடயம்தான். ஆயினும், வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்தாது நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது என கூறிக் கொள்வது கேலிக்கிடமான தொன்றாகும்.

இந்த வகையில் வடக்கு கிழக்கில் குறிப்பாக வடக்கில் தேர்தலை ஏதோ ஒருவிதத்தில், அதாவது தேர்தல் என்ற பேச்சிற்கு மட்டுமாவது இதனை நடத்த வேண்டிய நிலையில் அரசு உள்ளது. இந்த வகையிலேயே, தேர்தல் நடத்துவது எப்படி என அரசாங்கம் சிந்தித்து வருவதாகத் தெரிகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெறும் என்ற நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்துவது எவ்வாறு என்பது குறித்து ஆராய அரசாங்கம் தீர்மானித்து இருந்தது. இதன் பிரகாரம், எதிர்வரும் 29 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடி ஆராயவும் இருந்தது. ஆனால், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் தெரிவுக்குழுவின் செயற்பாடும் அற்றுப்போக, தேர்தல் நடவடிக்கைகள் குறித்து முழு முடிவையும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

ஐ. தே. கட்சியைப் பொறுத்தும், டி. பி. விஜேதுங்

# எமக்கு கிடைக்கும் ஆதரவு அரசுக்கு அச்சம் தந்தது

### பாராளுமன்ற கலைப்பு குறித்து சந்திரிகா

(கொழும்பு)

எமக்கு மக்கள் மத்தியில் கிடைத்து வரும் பெரும் ஆதரவுக்கு பயந்து அரசு முதலில் பொதுத்தேர்தலை நடத்த முன்வந்துள்ளது. இது அரசிற்கு கிடைக்கவுள்ள படுதோல்வியின் அறி குறியாகவே நாம் கருதுகின்றோம். எப்படியிருப்பினும் தேர்தலில் வெற்றி பெறப்போவது நாமே என மேல் மாகாண சபை முதலமைச்சரும் சுதந்திரக்கட்சி பிரதித்தலைவியுமான திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா. குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பாக அவரிடம் கருத்து கேட்கப்பட்ட போது நாம் தேர்தலுக்கு தயார். பாராளுமன்றில் பெரும்பான்மை ஆசனத்தை நாம் கைப்பற்றுவோம் எனவும் கூறினார். பாராளுமன்றம் கலைப்புத் தகவல் வெளியானதும் சந்திரிகா தலைமையில் சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் கூடி நிலைவரம் குறித்து ஆராய்ந்ததாக தெரியவருகிறது.

இதேசமயம் தமக்கு நெருக்கமான அமைச்சர்களுடன் கலந்து பேசிய பின்பே ஜனாதிபதி பாராளுமன்ற கலைப்பு அறிவிப்பை வெளியிட்டதாக கூறப்படுகிறது.

# காமினி பொன்சேகா சு.கவில் இணைவார்?

### எம். பிகளை சந்தித்துப் பேசினார்

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா சுதந்திரக்கட்சி தலைமையிலானஎதிரணி கூட்டணியில் இணைய முயற்சி மேற்கொள்வதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தல்களின் போது தமக்கு ஆதரவாக செயற்படுமாறு கோரி அண்மையில் காமினி பொன்சேகாவைதென்மாகாண சுதந்திரக்கட்சிஎம்.பிகள் சிலரும் மாகாணசபைஉறுப்பினர் சிலரும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது கோரிக்கையை தாம் தீவிரமாக பரிசீலித்து தமது முடிவை ஒரு வாரத்தினுள் அனுப்பி வைப்பதாக காமினி பொன்சேகா தம்மை சந்திக்க வந்த மேற்படி சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடம் உறுதியளித்தார்.

காமினி பொன்சேகா அரசாங்கத்தில் சர்ச்சைக்குரியவராகவும் அரசின் கொள்கைகளையும் ஊழல்களையும் அரசிற்குள் இருந்தவாறே கண்டிப்பவராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கடலோரப்படை நவீனமயமாக்கப்படும்

### இந்திய பாதுகாப்பு இணையமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய கடலோரக் காவற்படை நவீன துப்பாக்கிகள், கப்பல்கள் வசதியுடன்மேலும் திறனாக்கப்படவுள்ளதாகவும் விரைவு ரோந்துப்படகுகள், இடைமறிப்பு படகுகள், கரையோரக் கண்காணிப்பு விமானங்கள் ஆகியவை இதற்கென வாங்கப்படும் எனவும் இந்திய பாதுகாப்பு இணையமைச்சர் மல்லிகார்ஜுன் கூறியுள்ளார்.

பாக்கு நீரிணைக்கப்பால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கருத்து தெரிவித்த அவர் இலங்கையுடன் உயர் நிலைக்கட்டத்தில் இது பேசப்பட்டது என்றும் இந்திய - இலங்கை கடற்படை அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க இணங்கியுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

மீனவர் பாதுகாப்பிற்காகவும், ரோந்து பணியை அதிகரிக்கவும் தமிழகத்தில் கடற்படையின்7 அணிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ருவாண்டாவில் பிரெஞ்சு படைகள் மீதான எதிர்ப்பு கைவிட முடிவு

மாணவரை ஆசிரியர்

## தேசப்பற்றுள்ளவராக வளர்க்க வேண்டும்

(வடமராட்சி)

ஆசிரியர்கள் தன்னைத் தானே இந்தப் பாடசாலைக்கு அர்ப்பணித்து மாணவர்களை தேசப் பற்றுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். அதே வேளை மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நல்ல பரீட்சை பெறுபேறுகளை எடுக்க வேண்டும்.

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் திரு. ஆ. வடிவேலு தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இப்பாடசாலையில் ஆரம்ப ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து வருகிறது. இக்குறை இங்கு மட்டுமல்ல யாழ் மாவட்ட பாடசாலைகள் தோறும் நிலவிவருகிறது. எனினும் இதனை தீர்த்துவைக்க முயற்சி எடுப்போம், பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களைக் கனம் பண்ணி கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இப்பாடசாலைக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இப்பாடசாலையில் இளம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்கள் மாணவர்களை மற்றைய பாடசாலைகளுடன் போட்டி போடும் அளவுக்கு திறமை பெற்றிருக்கின்றனர். அதே சமயம் பெற்றோர்கள் இப்பாடசாலை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மேலும் இந்த மாணவர்களை சமூகம் போற்றும் வகையில் பெற்றோர் கூடுதல் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும்.

மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராசேந்திரன், ஓய்வு பெற்ற அதிபர் திரு. வ. சி. மயில்வாகனம், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினர் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

ஜனாதிபதி வேட்பாளராக

## சந்திரிகாவை அறிவிக்க கட்சி உயர்மட்டம் முடிவு

பொதுத் தேர்தலுக்கான சுதந்திரக் கட்சியின் பிரசாரத்தின் போது பின்னர் நடக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு சுதந்திரக் கட்சி வேட்பாளராக சந்திரிகா குமாரணதுங்காவே போட்டியிடுவார் என அறிமுகஞ் செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கட்சி உயர் மட்டம் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக ஜனாதிபதி வேட்பாளராக சுதந்திரக் கட்சி சிறிமாவோ பண்டாரநாயக்காவையே நிறுத்தும் என அக் கட்சி அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிறுபோகத் தரவுகள் திரட்ட நடவடிக்கை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விபரக் கிளையினால் 1994-ம் ஆண்டுக்கான சிறுபோகத் தகவல் சேகரிப்பாளருக்கான பயிற்சி வகுப்பு கடந்த 8 ஆம் திகதி நடாத்தப்பட்டு தகவல் சேகரிப்பு வேலை ஆரம்பிக்கப்

## கல்விச்சுற்றுலா

கொழும்புத்துறை மேற்கு

வின் செயற்பாடும் அற்றுப்போக, தேர்தல் நடவடிக்கைகள் குறித்து முழு முடிவையும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

ஐ. தே. கட்சியைப் பொறுத்தும், டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்தும் எவ்வாறெனினும் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதே நோக்கமாகும். இதற்கு இவர்கள் எந்தக் குறுக்கு வழியையும் கடைப்பிடிக்கவும் தயாராக உள்ளனர், கடந்த காலங்களிலேயே பல தேர்தல் மோசடிகள் மற்றும் தேர்தல் விதிகளுக்கும், ஜனநாயக மரபுகளின் செயற்பாடுகளுக்கும் ஐ. தே. க. பொறுப்பாக இருந்துள்ளது. தேர்தல் மோசடி இவர்களுக்குப் புதியதல்ல இந்த வகையில் பாகிஸ்தான் ஜனாதிபதி சியா குல்ஹக் வகை தேர்தலையோ அன்றி மார்கோஸ் காலத்துப் பிலிப்பைன்ஸ் தேர்தலைப் போல் ஒரு தேர்தலையே நடத்தலாம்.

இல்லாது போனால், இலங்கையில் தேர்தல் மோசடிக்கு வழிகாட்டியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் காட்டிய வழியையோ, அன்றி பிரேமதாசா 1988 ஜனாதிபதித் தேர்தலில் காட்டிய வழிமுறையையோ, அன்றி இவ்விரண்டும் இணைந்த ஒரு வழிமுறையையோ கடைப்பிடிக்கலாம். அல்லது கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலின் போது கடைப்பிடித்த கொள்கையை டி.பி. மீண்டும் கடைப்பிடிக்கலாம்.

டி. பி. விஜேதுங்கா இவ்வாறானதொரு வழிமுறையை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டதாக அவரது நடவடிக்கைகள் வெளிப்படுகின்றன. யாழ் செயலகத்தை தெல்லிப்பளைக்கு மாற்றுமாறு டி.பி.விஜேதுங்காவின் அரசு யாழ். அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கியதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். ஆனால், இது தான் அவரது ஆரம்ப வேலையா? அல்லது பல செயற்பாடுகளை முடித்து விட்டாரா என்பதும் தெரியவில்லை.

இதேசமயம் பாராளுமன்றத் தேர்தலின் முன்போ அன்றி ஜனாதிபதித் தோதலின் முன்போ வடக்கு-கிழக்கு தேர்தல் குறித்து அரசியல் யாப்பில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையும் இருப்பதாக இல்லை. ஜனாதிபதித் தேர்தலின் முன் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதினால், புதிதாக தெரிவாகும் பாராளுமன்றம்கூட இம் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை.

இந்நிலையில் டி. பி. விஜேதுங்கா பாராளுமன்றத் தேர்தலுக்கு இல்லாது போனாலும் ஜனாதிபதித் தேர்தலில் சட்ட ரீதியான விளக்கத்திற்கு ஏற்றவாறு வடக்கு கிழக்கில் தேர்தலுக்கு ஏற்பாடு செய்தே ஆகவேண்டும். ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல் வருவதினால் ஜனாதிபதித் தேர்தலுக்கான அணுகுமுறையைப் பொதுத் தேர்தலிலேயே பர்ட்சித்துப் பாாத்துவிடலாம்.

# மீதான எதிர்ப்பு கைவிட முடிவு

### கிளர்ச்சியாளர் அறிவிப்பு

(கிகாலி)

பிரெஞ்சுபடைகள் மனிதாபிமான முறையில் பொதுமக்களை பாதுகாக்கும் முயற்சியில் மட்டும் ஈடுபடுமாயின் பிரெஞ்சு படையினர் மீதான தமது எதிர்ப்புப் போக்கு மீள்பரிசீலிக்கப்படும் என ருவாண்டா தேசபக்த முன்னணி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மர்களை காப்பதே பிரெஞ்சு படைகளின் பணியாக இருப்பின் அவர்களின் பிரசன்னத்தை தாம் எதிர்க்கப்போவதில்லை என கிளர்ச்சிக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் ருவாண்டாவில் உள்ள ஐ நா. படைகள் வாபஸ் பெற வேண்டும் எனத் தாம் கோரப்போவதில்லை எனவும் இங்குள்ள ஐ.நா படை பலப்படுத்நப்பட வேண்டும் எனவும் ருவாண்டா கிளர்ச்சி குழு கூறியுள்ளது.

ருவாண்டா அரச படைகள் உள்ள அந்நாட்டின் மேற்கு பகுதியில் பிரெஞ் துருப்புகள் தற்போது நிலை கொண்டுள்ளன. இதேவேளை கிகாலியில் ருவாண்டா பெரும்பான்மை ஹூட்டு அரசபடைகளுக்கும் சிறுபான்மை டுட்சி இன கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வருகிறது.

இதனிடையேபிரெஞ்சு துருப்புகளுக்கு உதவியாக இத்தாலியும், செனிகல்லும் படைகளை ருவாண்டாவிற்கு அனுப்ப முன் வந்துள்ளன. அத்துடன் இதற்கு அமெரிக்க விநியோக உதவியையும் பிரான்ஸ் கோரியுள்ளது.

## யேமன் போரை நிறுத்த ஐ. நா. செயலர் முயற்சி

யேமனில் நடைபெறும் உள்நாட்டுப் போரை நிறுத்துவது தொடர்பாக ஐ. நா பொதுச் செயலர் பூட்ரஸ் காலி நியூயோர்க்கில் தொடர்ந்து பல தரப்பினருடனும் பேச்சு நடத்தி வருகின்றார்.

வட, தென் யேமன் பிரதிநிதிகளுடனும் அவர் தனித் தனியாக சந்தித்துப் பேசினார். போரை நிறுத்துவதற்கான திட்டத்தை பூட்ரஸ் காலி பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் ஏடன் மீது வடயேமன் விமானப்படை தொடர்ந்து நடத்திய குண்டு வீச்சில் 11 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

## ஹெய்ட்டியுடனான விமானசேவை நிறுத்தம்

### அமெ.வங்கிகளும் மூடப்பட்டன

(வாஷிங்டன்)

ஹெய்ட்டி இராணுவ அரசிற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கையின் ஒருபகுதியாக அந் நாட்டுடனான பிறநாடுகளின் விமானசேவைகள் நேற்றுமுதல் துண்டிக்கப்பட்டன. இதன் மூலம் அங்கு இராணுவ அரசுக்கு எதிரான பொருளாதார தடை மேலும் இறுக்கமடையும் எனக் கூறப்படுகிறது.

இறுதி விமானங்களில் தமது நாட்டவர்களை ஹெய்ட்டியிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்காவும் கனடாவும் கோரியுள்ளன. இதே சமயம் ஹெய்ட்டியுடனான நாணய பரிமாற்றத்தை அமெரிக்கா நிறுத்தியதுடன் அங்குள்ள தனது இரு வங்கிகளையும் மூடிவிட்டது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி கிளின்டன் விடுத்திருந்தார்.

...பாட்டு நிறுவனத்தின் புள்ளி

## கல்விச்சுற்றுலா

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஆதரவில் கொழும்புத்துறை மாதர் கழகம், இந்து இளைஞர் மன்றம் ஆகியன ஒன்று சேர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள ஆலயங்கள் மற்றும் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட இன்று காலை கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சுற்றுலாவில் பங்குபற்ற விரும்பும் நிலைய அங்கத்தவர்கள் நிலையத் தலைவர் திரு கா. கணேசதாசனுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

## ரஷ்ய அணியை சுவீடன் தோற்கடித்தது

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன் தினம் நடந்த ஆட்டங்களில் கமரூன் - பிரேசில் அணிகளிடையிலான போட்டியில் பிரேசில் இலகுவாக 3:0 என்ற கோல் கணக்கில் கமரூனை தோற்கடித்தது.

மெக்சிக்கோ - அயர்லாந்து போட்டியில் மெக்சிக்கோ 2:1 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வென்றது.

மற்றுமோர் போட்டியில் ரஷ்யாவை சுவீடன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

## ஜெயலலிதா தலைமையில் டில்லிக்கு குழு

தமிழ்நாட்டில் 69 சதவிகித ஒதுக்கீட்டை தொடரும் வகையில் மத்திய அரசை வற்புறுத்துவதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான தூதுக்குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா தலைமையில் செல்லும் தூதுக்குழுவில், தமிழக பாரதீய ஜனதா கட்சி, திராவிடர் கழகம் ஆகியவை உட்பட மற்றும் சில கட்சிகளும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 06. 26 ஞாயிறு இரவு

08.01 - இசையரங்கம் - பாடுபவர் திரு. எஸ். பாலசிங்கம்
08.30 - செய்திகள்
08.40 - தொடர் நாடகம் - இலங்கைமண் 29 ம் அங்கம்

### 1994. 06. 27 திங்கள் காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - மணியாரம்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப்பாடல்கள்

...ஆண்டுக்கான சிறுபோகத் தகவல் சேகரிப்பாளருக்கான பயிற்சி வகுப்பு கடந்த 8 ஆம் திகதி நடாத்தப்பட்டு தகவல் சேகரிப்பு வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது

இவர்களால் இவ்வாண்டிற்கான சிறு போகத்தில் நெல், மேட்டு நிலப்பயிர்கள் பயிரிடப்பட்ட, அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு விபரம் செய்கை பண்ணப்படாத நிலப்பரப்புத் தொகை விபரம் என்பவற்றை முழுத்தொகை மதிப்பு மூலமும் மாதிரி அளவீட்டு முறை மூலம் உற்பத்தி செலவு விபரம், நெல் அறுவடை விவரம் போன்ற தகவல்களையும் வட தமிழீழத்தில் திரட்ட இருககிறார்கள்.

இந்தப் புள்ளி விபரத் தகவல்களிலிருந்து சிறுபோகச் செய்கைக்குட்படுத்தப்படாத விவசாய நிலங்களை இனங்கண்டு அவற்றைப் பயிர்ச் செய்கைக்குள் கொண்டு வருவதன் மூலம் வட தமிழீழத்தில் உணவு உற்பத்தியைஅதிகரிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 150 ஆண்டு நிறைவு

(மானிப்பாய்)

வை. எம் சி. ஏ அமைப்பின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று யாழ். வை. எம். சி. ஏ கட்டிடத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் கோ. றுசாங்கன் நெறியாள்கை செய்த ''கூடுவிட்டு'' எனும் நாடகமும், மற்றும் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களது இசை நிகழ்ச்சியும் நேற்றைய கலை நிகழ்வுகளில் முக்கிய இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## நிறுத்தம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மா விற்பனையை நேற்று திடீரென நிறுத்தியுள்ளது.

இச் சங்க கிளைகளுக்கு மா விற்பனை செய்ய வேண்டாமென இச் சங்கம் வழங்கிய பணிப்புரையையடுத்து இவ் விற்பனை நிறுத்தப்பட்டுளது. (யோ

பொதுசன நூலகம்

# மதிப்பீடு செய்ய முடியாத மாபெரும் தலைவர் பிரேமதாசா

**- டி. பி. விஜேதுங்கா புகழாரம்**

மிகக் குறுகிய காலத்தில் எண்ணில் அடங்காத தடைகளை எதிர்நோக்கிய ஒரு தலைவர் காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாசா என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் எழுபதாவது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற புத்தக வெளியீட்டுவிழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய டி. பி. விஜேதுங்கா மேலும் கூறுகையில், பிரேமதாசா பதவியேற்ற காலத்தில் நாட்டின் வடக்கிலும், தெற்கிலும் அமைதியற்ற சூழ்நிலையே காணப்பட்டது. அவரைப் போன்ற ஒரு மாபெரும் தலைவரின் பணியையும், வாழ்வையும் குறுகிய நேரத்தில் மதிப்பிட்டுக் கூறுவது எவருக்குமே இலகுவானதல்ல சிரமமான ஆனால் அவசியமான இக் கைங்கரியத்தை வரலாற்று ஆசிரியர்களே நிறைவு செய்ய வேண்டும். இப்போதைக்கு நாம் சொல்லக் கூடியதெல்லாம் தம் மக்களுக்காகவே வாழ்ந்து தம் மக்களுக்காகவே மடிந்த ஒரு மாபெரும் தலைவர் இருந்தார் என்பது மட்டுமேயாகும், எனத் தெரிவித்தார்.

மிகக் குறுகிய காலத்தில் இப் புத்தகத்தை தயாரித்த பிரேமதாசா நிலையத்தினரையும், அதன் தலைவரான அமைச்சர் சிறிசேன கூரேயையும் ஜனாதிபதி பாராட்டினார்.

## ஜனாதிபதித் தேர்தல் பற்றி தெரிவுக்குழு ஆராய இருந்தது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தலை எவ்விதம் நடத்தலாம் என்பது குறித்த அரசியல் சட்டப் பிரச்சினைகளை அரசியல் சட்டதிருத்தங்களுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராயவிருந்தது.

இதற்கானதெரிவுக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி கூடுவதாகவும் ஏற்பாடாகியிருந்தது. வடபகுதியில் அநேகமான தேர்தல் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இப் பகுதியில் தேர்தல் நடத்துவது குறித்து இத்தெரிவுக்குழு ஆராய திட்டமிடப்பட்டிருந்தது.

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுபகுதியில்பொது மக்கள் அதிகமாக இல்லை. 1988இல் ஜனாதிபதித் தேர்தல், அப்போது இந்தியப் படை பிரசன்னமாக இருந்தமையால் வடபகுதியில் நடைபெற்றதாகவும் தெரிவுக்குழு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

வடபகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்து இத்தெரிவுக்குழு தனது உறுப்பினர்கள் சமர்ப்பித்த பல திட்டங்களை கவனமாக ஆராய்ந்து அது குறித்து கலந்துபேசி முடிவு எடுக்க திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், தற்பொழுது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் தெரிவுக்குழு தனது செயலாற்றலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

### 30 ஆண்டுகளில்

உற்பத்தி அதிகரிக்கப்படாமையினால் இந்த நிலை ஏற்படவிருப்பதாகவும் , எதிர்காலத்தில் இது குறித்து கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் உணவுப் பஞ்சத்தை தடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகளை இது 'பெரியளவில் பாதிக்காது என்றும் வளர்ச்சி

## மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 7-30மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வலிகாமம் கோட்டம் சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த 6ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 8-00 மணிக்கு மானிப்பாய்மெமோறியல்ஆங்கில பாடசாலையில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில்கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### நாட்டின்

முகமாகவும் ஆதரிக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன். முன்மாதிரியான அரசியல் நடத்துவதே எனது ஒரே நோக்கமாகும் அதன் மூலம் இன்று அதிகாரத்தை கைப்பற்ற முயலும் இரகசிய ஊழல் சக்திகளை தோற்கடிக்க முடியும்.

போர் நடவடிக்கைகளை கைவிட்டு பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றை கண்டு நாட்டின் அரசியலமைப்பில் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்தோம் இந் நடவடிக்கை மூலம் முக்கியமான பெறுபேறுகள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

வடக்கில் இடம்பெறும் சண்டைக்கு ஒரு முடிவு காண

### வடக்கில்

கோட்டை, சாவகச்சேரி ஆகிய தொகுதிகளின் வாக்காளர் பட்டியலே கோரப்பட்டதாகதெரியவருகின்றது.

இதேவேளை, அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பு செல்வதற்கு வசதியாக விசேட விமானம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் நாளை திங்கட்கிழமை கொழும்பிற்கு சகல

## கிராமிய பாசறை

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையின் ஏற்பாட்டில் கோவிலாக்கண்டி, மற்றும் இராச கிராமத்திலும் கிராமியப் பாசறை நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இவ் இரு கிராமங்களிலும் பெருமளவு மக்கள் இக் கிராமியப் பாசறை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

## தேர்தலுக்கு கட்சிகள் தயார்

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட பல கட்சிகள் தயாராகி வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியும் பிரதான கட்சிகளாக போட்டியிட இருப்பதாகவும் மக்கள் ஐக்கிய முன்னணி, நவலங்கா சமசமாஜ கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் அமைப்புகள் போட்டியிடும் எனவும் மேலும் தெரியவருகின்றது.

### ஜனாதிபதி

திகளில் தமது அமைப்பாளர்களைக் கூட இதுவரை நியமனம் செய்யவில்லை என கூறப்படுகிறது.

### கம்பஹா

உடனடியாக பல தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### பாக்குதலை

ரணைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் அவர்களது குடியிருப்புக்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### பிரதான

மையில் நடைபெறவுள்ளதாகவும் ஆனால் பிரசாரக் கூட்டங்களில இவர் உரையாற்ற மாட்டார் எனவும் தெரியவருகிறது.

பிரதான பேச்சாளர்களாக ரணில்விக்கிரமசிங்கா, காமினி திசாநாயக்கா, சிறிசேனகூரே றொனி டி மெல் ஆகியோரே இடம்பெறுவர் எனவும் தெரியவருகிறது.

### சகாக்களுடன்

கலைத்துள்ளமை இதையே காட்டுகின்றது எனவும் தெரி

> தீ எனப் பெண்ணே எழுந்திடு
> சீதனப் பேயினை எரித்திடு

# இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை ஆராய மாநில முதல்வர்கள் கூட்டம்

(சென்னை)

இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை முழுமையாக ஆராயப்படவேண்டிய ஒரு விடயமாதலால் இது குறித்து எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்பாக மத்திய அரசு தலைமை வழக்கறிஞரிடமும், கலந்தாலோசனை நடத்த வேண்டியிருப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வசதி செய்யும் முகமாக தமிழ்நாடு அரசின் மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தரும்படி தம்மைச் சந்தித்து வலியுறுத்திய தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தூதுக்குழுவிடம் அவர் மேலும் கூறுகையில், இது தொடர்பாக அனைத்து மாநில முதல்வர்களதும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார். அத்துடன் அமைச்சரவைக் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தூதுக்குழுவினர் பிரதமர் நரசிம்மராவிடம் 22 பக்கங்களைக் கொண்ட மனுவொன்றைக் கையளித்ததாகவும், பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழலில் இடம் பெற்றதாகவும் மாநில அரசின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான இத் தூதுக்குழுவில், திராவிடக்கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி, பார்வார்ட் புளக் கட்சியின் ஆண்டித்தேவர், குடியரசுக் கட்சியின் செ. கு. தமிழரசன், முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமத், உழவர் உழைப்பாளர் கட்சித்தலைவர் செல்லமுத்து, ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பா. மாணிக்கம், தமிழ்த் தேசிய இயக்கத்தின் பா. நெடுமாறன், பாரதீய ஜனதாவின் என். எஸ் சந்திரபோஸ் உட்பட 27 பேர் கலந்து கொண்டனர்

## செல்லச்சாமி- ஜே. ஆர். இரகசிய சந்திப்பு

போக்குவரத்துதுறைராஜாங்க அமைச்சரும், சர்ச்சைக்குரிய இ. தொ. கா. பிரமுகருமான எம். எஸ். செல்லச்சாமி தமக்கு நெருக்கமான சில ஆதரவாளர்களுடன் முன்னாள் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை சென்று சந்தித்துள்ளார்.

ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற இச்சந்திப்பு மிக இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், செல்லச்சாமியின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கடும் போக்காளர் என்ற கருத்தைமாற்றடி.பி.முயற்சி

**பி. பி. சி. செய்தியாளர் தெரிவிப்பு**

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையில்கடும் போக்குடையவர் என்னும் கருத்தைப் போக்க ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா நேற்று நாட்டு மக்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமான உரையில் முயற்சி செய்துள்ளார். எனினும் இந்த முயற்சியில் அவர் வெற்றி பெறுவது சந்தேகமே என்று பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மறு நாளான நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஐ. தே. க சார்பான உரையொன்றை ஆற்றியுள்ளார். இந்த உரையில் ஐ தே. க அரசின் சாதனைகள், போரை முடிவுக்கு கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வறுமை ஒழிப்பு வேலைத் திட்டம் போன்றவற்றை எடுத்துரைத்தார்.

இதேவேளை பிரதான எதி

### மின்கட்டணம் செலுத்தவில்லை

## ஆரையம்பதி ஆஸ்பத்திரி மின்விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

மின்கட்டணம் செலுத்த தவறியிருப்பதாகக் கூறப்பட்டு பொது வைத்தியசாலை ஒன்றின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது இச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி பொது

ரம் ரூபா கட்டணத்தை நிலுவையாக வைத்திருந்தது எனக் கூறி மின்சார சபை மின்விநியோகத்தை துண்டித்துள்ளது இதனால் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக நோயாளர்கள் பெரும் துன்பத்தை அடைய நேரிட்டுள்ளது சிகிச்சைக் களங்களில் தங்கியுள்ள சுமார் 40 நோயாளரும் 250க்கும் அதிகமான வெளி

ளை இது பெரியளவில் பாதிக்காது என்றும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இவ் உணவுப்பஞ்சம் உச்சக்கட்டத்தை அடையும் எனவும் இது குறித்து வளர்முக நாடுகள் போதிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க, நி)

**யாழ். ஸ்ரீதரில்**

**STEVENSPIELBERG**

இயக்கிய

**JURASSIC PARK**

(அறிவியல் சார்ந்த திகில் படம்)

**தினசரி 4, 6**

**சனி, ஞாயிறு 1030, 4,6 மணி**

(சி-9872)

வடக்கில் இடம்பெறும் சண்டைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற உணர்வு எமது அரசாங்கத்திற்கு எப்போதுமே இருந்துள்ளது சர்வகட்சி மாநாடு அரசியல் தீர்வுகாணகுமார் ஒருவருடம் முயற்சி எடுத்தது விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்ட பேச்சுக்கள் இடையில் முறிந்தன பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் விதப்புரைகளை தெரிவித்துள்ளது· நான்கூட போர் நடவடிக்கைகளை கைவிட்டு, பேச்சுவார்த்தை மூலம் நியாய தீர்வு கண்டு அதிகாரத்தை பகிரும் வகையில் தேர்தலில் பங்கு பற்றுமாறு விடுதலைப் புலிகளை கேட்டேன் ஆனால் உருப்படியான பயன் விளையவில்லை எனக் கூறினார்.

ஜனாதிபதி விஜேதுங்கா தமது உரையில் ஐ. தே. க. வின் சாதனைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் விளக்கி உரையாற்றினார்.

ளதாகவும் நாளை திங்கட்கிழமை கொழும்பிற்கு சகல ஏற்பாட்டுடனும் வரும்படியும் அத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் செய்து வருவதாகவும் இதற்காகவே அரச அதிபர் அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், அரசாங்கத்தின் மற்றுமொரு நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் தற்பொழுது இயங்கி வரும் யாழ். மாவட்ட அரச செயலகத்தை தெல்லிப்பழையிலுள்ள வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் கட்டடத்திற்கு மாற்றுமாறு நேற்று முன்தினம் மாலை அரசாங்கம் விசேட செய்தி ஒன்றின் மூலம் யாழ். அரச அதிபருக்குப் பணித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக அரச அதிபருக்கு விடுத்த பணிப்பும், வாக்காளர் பட்டியல் பெறப்படுவதும், மற்றும் அரச செயலகத்தை இடம் மாற்றும் முயற்ச்சியும் அரசாங்கம் தேர்தலை நடத்த கடைப்பிடிக்கும் குறுக்கு வழி எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக் குறுக்கு வழி மூலம் சில வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதும், அதில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களையோ, அன்றி சுயேட்சை அமைப்புக்கள் என்ற ரீதியில் தமது கைக்கூலிகளையோ போட்டியிட வைப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கலைத்துள்ளமை இதையே காட்டுகின்றது எனவும் தெரிவித்தார். தனக்கு சாதகமாக செயற்படக்கூடியவர்களே எதிர்கால பாராளுமன்றத்தில் தமது கட்சியின் சார்பில் இருக்கவேண்டும் என்பதையே அவர் விரும்புவதாகவும் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி பொது வைத்தியசாலை இலங்கை மின்சார சபைக்கு அறுபதினா

சைகளங்களில் தங்கியுள்ள சுமார் 40 நோயாளரும் 250க்கும் அதிகமான வெளி நோயாளரும் இந்த நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பெருநதொகையான மருந்து வகைகள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் பல் பிடுங்குவது போன்ற வைத்திய சிகிச்சைகளும் அளிக்க முடியாத நிலை ஏறபட்டுள்ளது-

இதேவேளை மின் கட்டணம் மாதாமாதம் செலுத்தப்பட்டதாகவும் பாக்கிப் பணம் தொடர்பான விபரம் அனுப்பும்படி சபைக்கு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கப்படவில்லை எனவும் சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு வைத்தியசாலைக்கும் மின்சாரம் இத்தகையதொரு காரணத்திற்காக துண்டிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிலும்

செய்தும் ஊர்வலங்களில் சென்றோருக்கு சிற்றுண்டிகள் மற்றும் உணவு பொருள்கள் வழங்கியும் ஆதரவு தெரிவித்துள்ளனர்-

வீதிகளில் சிவப்பு நீல, நிறக் கொடிகள் கட்டப்பட்டும் பல ஆயிரக் கணக்கான மக்கள் அலை அலையாக வீதிகளில் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டம் செய்த வண்ணம் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இதேவேளை கிராமப்புறங்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வாறு ஊர்வலமாக சென்றுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போன்றவற்றை எடுத்துரைத்தார்.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியும் தனது பிரசாரத்தின் போது பொருளாதாரப் பிரச்சனைகளுக்கே முதலிடம் தரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதிகரித்துள்ள வேலை இல்லாத் திண்டாட்டம், பணவீக்கம், அதிகரிப்பு என்பன போன்ற ஐ. தே. கவின் பலவீனமான பக்கங்களே சுதந்திரக் கட்சியின் தாக்குதல் இலக்காக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கால அட்டவணை மாற்றம்

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் கால அட்டவணையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று இலங்கை அரசு இந்திய அரசைக் கோரவுள்ளது.

**சீமாட்டி ——> பெயர் மாற்றம்**

★ **திருமாட்டி** புடைவைக் கடல் ★

**122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**தலைநகரில் முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் கைராசியான முன்னோடிகள்** (சி-9603)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.